# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 24 செவ்வாய்க்கிழமை (06.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 73


## கப்பல் பயணத்துக்கான பதிவுகள் செயலகத்தால் தற்காலிக நிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப்.6

காங்கேசன்துறை - திருகோணமலை பயணிகள் கப்பல் சேவைக்கான பதிவுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே கணிசமானவர்கள் பயணத்தை மேற்கொள்ளப்பதிவுகள் செய்துள்ளனர். அவர்களின் பயணங்கள் பூர்த்தியாகும் வரை புதிய பதிவுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

ஆகையால் கப்பல் பயண அனுமதி பெறுவது தொடர்பான எதற்கும் செயலகத்துக்கு இப்போதைக்கு சமுகமளிக்கவேண்டியதில்லை - என்று அரச அதிபர் தெரிவித்தார். (அ-1)

## நாளை திருமலை புறப்படும் கப்பலில் முன்னுரிமை பெற்றவருக்கே பயணவசதி

### இன்று காலை உறுதி செய்ய வேண்டும்

யாழ்ப்பாணம், பெப்.6

காங்கேசன் - திருமலை பயணிகள் கப்பலில் பயணம் செய்வதற்கு செயலகத்தால் சிபார்சு செய்யப்பட்டுள்ளவர்கள் இன்று காலை 9மணிக்கு யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் சமுகம் அளித்து தமது பயணத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்று யாழ். அரச அதிபர் கே.கணேஸ் கேட்டுள்ளார்.

யாழ். செயலகத்தால் அவசர தேவை கருதி சிபார்சு செய்யப்பட்டுள்ளவர்களில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்கள் மட்டுமே நாளை திருமலை புறப்படும் அடுத்த கப்பலில் அழைத்துச்செல்லப்படுவர். அதாவது அரச அதிபரால் சிபார்சு செய்யப்பட்டுள்ளவர்களில் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படும் 350பேரே கப்பல் பயணத்துக்காக நாளை அழைத்துச் செல்லப்படுவர் என்று சிவில் நிர்வாக அலுவலக வட்

(04 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய அரசியல் அணி ஒன்று ஐ.தே.கவுடன் சேரும் சாத்தியம்

## அதற்கான பேச்சு ஏற்கனவே ஆரம்பம்

கொழும்பு, பெப்.6

**ஐக்கிய தேசியக் கட்சியுடன் புதிய அரசியல் அணி ஒன்று இணைந்து கொள்ளும் சாத்தியம் உருவாகியுள்ளது. அது சம்பந்தமாக பேச்சுக்கள் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன. அடுத்த ஓரிரு மாதங்களில் அனைவரும் ஆச்சரியப்படத்தக்க முறையில் இந்தப் புதிய அணி உருவாகும்.**

இந்தத் தகவலை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

தமது கட்சியினர் மத்தியில் நம்பிக்கையுடனும் உறுதிபடவும் இதனை அவர் தெரிவிக்கிறார்.

ஐ.தே.கட்சியிலிருந்து அரசுடன் இணைந்து கொண்ட 18 எம்.பிக்கள் பிரதிநிதித்துவப்படுத்திய தொகுதிகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் மத்தியில் உரையாற்றும்போதே ரணில் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

இக்கூட்டம் ஐ.தே.கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தவில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அங்கு அவர் கூறியதாவது:-

ரணில் கட்சியைவிட்டுப் போனாலும் நாங்கள் கட்சியை விட்டுப் போகமாட்டோம் என்ற எண்ணத்துடன் ஐ.தே.கட்சியினர் இருக்கின்றனர்.

கட்சியைப் பிளவுபடுத்தும் இத்தாக்குதல் என்மீது நடத்தப்பட்டது அல்ல என்றும், கட்சிக்கும் நாட்டுக்கும் எதிராகவே இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

சமாதான முயற்சிகள் ஆரம்பமாகி அது முடிவடையும்வரை நாடாளுமன்றத்தில்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைபேசிச் சேவைகள் சீரடைந்தன

யாழ்ப்பாணம், பெப்.6

குடாநாடு மற்றும் வன்னிக்கான 'ரெலிகொம்' நிறுவனத்தின் தொலை பேசிச் சேவைகள் நேற்று கணிசமாகச் சீரானது.

கடந்த 27ஆம் திகதி தொடக்கம் குடாநாடு மற்றும் வன்னிக்கான தொலைபேசிச் சேவைகள் செயலற்றுப் போயின.

அதன் பின் ஒன்பது நாள்களின் பின்னர் குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசிச் சேவைகள் நேற்று முன்தினம் - ஞாயிற்றுக்கிழமை இரவிலிருந்தும் -

வன்னிக்கான சேவைகள் நேற்று மாலையிலிருந்தும் - சீராகியது.

யாழ்ப்பாணத்தில் 2மற்றும் 3 இலக்கங்களில் தொடங்கும் தொலைபேசிகள் தவிர்ந்த ஏனைய இலக்கங்களில் தொடங்கும் தொலைபேசிகள் இயங்கவில்லை. எனினும் ''சன்ரெல்'' தொலைபேசிகள் தொடர்ந்து இயங்கின. கைத்தொலைபேசிகளும் செயற்பட்டன.

## புறக்கோட்டையில் கைதான இளைஞர்களை பூஸா முகாமில் தடுத்து வைக்க உத்தரவு

கொழும்பு, பெப். 6

59ஆவது சுதந்திரதினத்தை முன்னிட்டு கடந்த சில நாள்களுக்கு முன்னர் கோட்டை, புறக்கோட்டைப் பகுதிகளில் நடத்தப்பட்ட தேடுதலின்போது கைதுசெய்யப்பட்ட தமிழர்களை பூஸா முகாமில் தடுத்து வைத்து விசாரணை செய்யும்படி கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுதந்திர தினத்தன்றும் அதற்கு முன்னைய தினங்களிலும் புறக்கோட்டை, கோட்டைப் பகுதிகளில் பாரியதேடுதல் நடத்தப்பட்டது. இதன்போது 300இற்கும் அதிகமான தமிழர்கள் கைதுசெய்யப்பட்டார்கள். இவர்களில் சிலர் பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஏனையோரை பொலிஸார் பூஸா முகாமில் வைத்து விசாரணை செய்துவருகின்றனர்.

இவர்களில்பெரும்பாலானோர்கொழும்பு செட்டியார் தெரு, கதிரேசன் வீதி ஆகிய இடங்களில் தற்காலிக தங்குமிடங்களில் வசித்து வந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் தொடர்பாக நீதிமன்றத்துக்கு பொலிஸார் தகவல் தெரிவித்தனர் என்றும் - அவர்களைத் பூஸா முகாமில் தடுத்து வைத்து விசாரணை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டதாகவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (த)

## திருமலை-கொழும்பு ரயிலில் 4 தமிழ் இளைஞர்கள் கைது!

கொழும்பு, பெப்.6

திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி புறப்படவிருந்த ரயில் நேற்றுமுன்தினம் மாலை 5.45 மணியளவில் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டது.

இதன்போது சந்தேகத்தின் பேரில் 4 தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டார்கள் என்று திருகோணமலைப் பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இவர்களிடம் இருந்து 30 ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த மருந்து வகைகளும் சுமார் 91 வாகன இலக்கத் தகடுகளும் கைப்பற்றப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)

## மாணவர்களின் வகுப்புப் புறக்கணிப்பால் கல்விச்செயற்பாடுகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப்.6

வடமராட்சியில் இருபாடசாலைகளில் காணாமற்போன மாணவர்களை விடுதலை செய்யுமாறுகோரி குடாநாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பகிஷ்கரிப்புக் காரணமாக பெரும்பாலான பாடசாலைகளில் கல்விச்செயற்பாடுகள் நேற்றும் பாதிக்கப்பட்டன.

வடமராட்சியில் ஆரம்பமான மாணவர்க்ளின் வகுப்புப் பகிஷ்கரிப்பு குடாநாடு முழுவதும் பரவி நேற்று ஐந்தாவது நாளை எட்டியது.

கடந்தவாரம் இயங்கிய பல பாடசாலைகளில் நேற்று மாணவர் வரவு வெகுவாகக் குறைந்து காணப்பட்டதாக பிரதேசங்களில் இருந்து வந்த தகவல்கள் தெரிவித்தன.

மாணவர்களின் வகுப்புப் புறக்கணிப்பு காரணமாக சகல வலயங்களிலும் மாணவர்களின் வரவு குறைவாகவே காணப்பட்டதாகவும்தகவல்கள்மேலும்தெரிவித்தன.(அ-1-79)

## தீவிர எதிர்பார்ப்புக்கு மத்தியில் சபையில் ரணில் இன்று உரை

கொழும்பு, பெப். 6

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று நாடாளுமன்றத்தில் விசேட உரை ஒன்றை நிகழ்த்தவுள்ளார்.

ஜனாதிபதியுடன் ஐக்கிய தேசியக் கட்சி செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான தனது நிலைப்பாட்டையும், கட்சியில் இருந்து அரசின் பக்கம்தாவிய சகாக்கள் தொடர்பாகவும் அவர் இந்த உரையில் தெளிவுபடுத்துவார் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டிருந்த வேளையிலேயே கருஜயசூரிய தலைமையிலான அதிருப்தியாளர்கள் 19 பேர் அரசின் பக்கம் தாவியதோடு அமைச்சர்களாகவும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி ஐ.தே.கவுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை உதாசீனப்படுத்திவிட்டார் எனக் குற்றம் சுமத்திய கட்சியின் தவிசாளர் ருக்மன் சேனநாயக்க,

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசன நெருக்கடிகளுக்கு மத்தியில் நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது

கொழும்பு, பெப்.06

59ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடிய சூட்டோடு இன்று நாடாளுமன்றம் கூடுகின்றது.

இதுவரை காலமும் போதிய பெரும்பான்மை இன்றி தடுமாறிக் கொண்டிருந்த சிறுபான்மை அரசு இன்று ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தியாளர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் பெரும்பான்மைப் பலம்கொண்ட அரசை அமைத்துள்ளது. இதனால் நாடாளுமன்றத்தில் அரசின் பலம் 120ஆக உயர்ந்துள்ளது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக 53 பேரும், அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாக 33 பேரும், பிரதியமைச்சர்களாக 20 பேரும் இருக்கின்றனர். இதேவேளை, ஸ்ரீல.மு.காங்கிரஸைச் சேர்ந்த நியாமுதீன் பிரதியமைச்சராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் என 106 பேர் இருக்கின்றனர். ஆளும் தரப்பில் இவர்களுக்கான ஆசனங்களை வழங்குவதில் பெரும்சிக்கல் ஏற்பட்டிருப்பதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் கூறுகின்றார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## வேப்பங்குளம் தாக்குதலில் இராணுவக் கப்டன் மரணம்!

வவுனியா, பெப்.6

வவுனியாவில் வேப்பங்குளம் - பண்டாரிக்குளம் வீதியில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் நடத்தப்பட்ட ஒரு தாக்குதலில் இராணுவ அதிகாரி ஒருவர் உயிரிழந்தார். சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

அப்பகுதியில் வீதி ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர், பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலிலேயே அதிகாரி தரத்திலான ஒருவர் உயிரிழந்தார் என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

உயிரிழந்த படை அதிகாரியின் சடலம் வவுனியா மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டு பின்னர் அங்கிருந்து படைமுகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டது. கொல்லப்பட்ட படை அதிகாரி கப்டன் தம்மிக்க குமார என்று அடையாளம் காணப்பட்டார்.

இந்தத் தாக்குதலினால் வேப்பங் குளம் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது. கடைகள் மூடப்பட்டன; வீதிகள் வெறிச்சோடின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு மாத நிறைவில்... நினைவஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி இரங்கநாயகி செல்வராசா
அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் சிவகுரு சிவலோகம்


(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்கள் இறைபதம் அடைந்த ஒரு மாத நிறைவில் அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர், ஊழியர் நலன்புரிச் சங்கம்,
யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

(சி/51977)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### வைத்திலிங்கம் பரமசிவம்

(கொழும்பு ஆறுமுகம் கொம்பனி மற்றும் மதவாச்சி ஆசிறி கோல்ட் ஹவுஸ் நிறுவனங்களின் முன்னாள் காசாளர்)

தாயின் மடியில் 15.03.1942
ஆண்டவன் அடியில் 07.01.2007

அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (06.02.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பெரிய மதவடி லேன்,
உடுவில் கிழக்கு, சுன்னாகம். (57736) - குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 02 - 08 - 1990



ஆண்டவன் அடியில் 18 - 01 - 2006

### அமரர் துஷ்யந்தி சின்னமணி

(யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய தரம்11A மாணவி)

திதி: சதுர்த்தி (2007.02.06 செவ்வாய்க்கிழமை)

ஆண்டு ஒன்று சென்றாலும் எங்கள்
மனதை விட்டு நீங்காத செல்லமே;
பாசத்தின் பிறப்பிடமாய்,
பண்பின் சிகரமாய் - கொண்ட
எம் செல்ல மகளே !
தவிக்கின்றோம் உன்திருமுகம் காண
ஓடி வருவாயா?
எங்கள் அன்பு மடிதனிலே
மழலை பொழியும் உன் நெஞ்சம்
எம் நெஞ்சத்தில் என்றும்
இன்று மண்ணோடு மறைந்து விட்டாய்
உன் பிரிவினால் வாடுகின்றோம்.

நி.முகவரி:
கிளானை,
தெல்லிப்பழை கிழக்கு.

த.முகவரி
அராலி வீதி,
சங்கானை.

துயருற்றிருக்கும்:
அப்பா, அம்மா, தம்பிமார்
மற்றும் அனைவரும்.

(57746)

## 73ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 23 . 03 . 1950



இறப்பு 27 . 11 . 2006

### திருமதி கந்தசாமி இராசமணி (இராசா)

ஒரு நொடியில் பிரிந்ததம்மா உமது உயிர்
தனிய நாம் தவிக்கின்றோம்
தங்கள் முகம் காணாமல்
ஆடி அடங்கிடும் வாழ்க்கையம்மா
அமைதி கொண்டீரோ எமைவிட்டு

எம் குலவிளக்கின் 73ஆம் நாள் நிகழ்வு நாளை (07.02.2007) புதன்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும் தொடர்ந்து சபிண்டீகரண நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தூதாவளை,
கரணவாய் தெற்கு. (57706)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

70 நாள் நிரம்பிய உயர் இன ஜேர்மன் செப்பேட் கொக்கஸ் பேனியர், டெல்மேஷன் - டோபர்மன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. சகல தடுப்பூசிகளும் போடப்பட்டது. புத்தகம் உண்டு.

தொடர்பு: V.S.சற்குணன்
52, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 7535

(57776)

## கரம், மேசைப்பந்தாட்டப் போட்டிகள்

மணிக்குரலின் ஏற்பாட்டில் மணிவதனன் & ஜெயச்சித்ரா சகோதரரின் 12ஆம் ஆண்டு ஞாபகார்த்த ஓப்பின்ஸ் கரம், மேசைப்பந்தாட்டம் (ஆண், பெண் இருபாலாரும்) இடம்பெறவுள்ளன.

போட்டிகள் இடம்பெறும் இடம்:
யாழ். மத்திய கல்லூரி
விண்ணப்பங்கள் 14.02.2007 புதன்கிழமை.
பி.ப. 3 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
போட்டிகள் ஆரம்பம் : 15.02.2007
விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளும் இடம்:
52, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. : 7535

- வி.எஸ்.சற்குணன்.

(57776)

## 31ஆம் நாள் நினைவு

### வைரவப்பிள்ளை மகேசன்

(யாழ்ப்பாணம், சுண்டிக்குளி சாயி பஜனை நிலைய முன்னாள் தலைவர்)




அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஜெய் சாயிராம்
சத்தியசாயி பஜனை நிலையம்,
சுண்டிக்குளி. (57781)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 06 . 12 . 1936



இறப்பு 07 . 01 . 2007

### வைரவப்பிள்ளை மகேசன்

எமது குடும்பத் தலைவன் நோயுற்று இருந்த காலத்தில் வைத்தியசாலையில் உதவி புரிந்த டாக்டர்கள், தாதியர் மற்றும் அயலவர்களுக்கும் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு வந்து உதவிய உறவினர்கள், அயலவர்கள் மற்றும் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்கள், கண்ணீர் அஞ்சலி செலுத்திய தேசிய நீர் வழங்கள் வடிகால் அமைப்புச் சபையினர், மலர் வளயம் சாத்திய சென்.பற்றிக்ஸ் பழைய மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி. (57780) - அன்பு மனைவி.

## மரண அறிவித்தல்

### Dr. வேலாயுதபிள்ளை குகமூர்த்தி

(Retired IPT)



நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட Dr. வேலாயுதபிள்ளை குகமூர்த்தி நேற்று (05.02.2007) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

259, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (57786)

தகவல்:
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர்
ப.விக்னேஸ்வரன் அவர்களின்



அன்புத் தாய்
திருமதி

### பரிமளம் பரமநாதன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தின ரின் துயரில் நாமும் பங்கேற்பதோடு ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்து அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible]

(57789)

## சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம் : 14.02.2007 புதன்கிழமை
நேரம் : முற்பகல் 11 மணிக்கு
இடம் : சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபம்

மன்றின் விடயமாக பிரேரணைகள் இருப்பின் 10.02.2007 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் மன்றச் செயலாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்கவும்.

அமரர் ச.நமசிவாயம் புலமைப்பரிசில் நிதியும், அமரர் கு.தவராஜசிங்கம் விதவை நிதியமும் கையளிக்கப்படவுள்ளன.

மேற்படி கூட்டத்திற்கு அனைத்து வணிகர்மன்ற அங்கத்தவர்களையும் தவறாது கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தனங்களப்பு வீதி,
சாவகச்சேரி. (சி-51986)

செயலாளர்,
கைத்தொழில் வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.

## இணைப்பாளர் தேவை

மாவட்டச் சிறுவர் அபிவிருத்திக்குழு FIT (CIDA) நிறுவனத்தின் அனுசரணையில் பாடசாலை மட்டத்திலான அபிவிருத்திக்குழுக்களை மேற்கொண்டு வருகின்றது. இத்திட்டத்தை செயற்படுத்த எமக்கு இணைப்பாளர் ஒருவர் தேவைப்படுகின்றார். கீழ்க்காணும் தகைமை உள்ளவர்கள் இணைத்தலைவர், மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழு, அறை எண் 30, யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 10.02.2007 அன்று பி.ப. 2 மணிக்கு முதல் நேரடியாக காரியாலயத்தில் விண்ணப்பங்களை கையளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

★ க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
★ 25 வயதிற்கும் 35வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.
★ சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும்மோட்டார் சைக்கிள்வைத்திருக்க வேண்டும்.
★ சிறந்த தொடர்பாடல் திறன் இருத்தல் வேண்டும்.
★ ஆங்கிலம் மற்றும் பிற மொழித் திறன் இருத்தல் வரவேற்கப்படும்.
★ கணனி அறிவு கட்டாயமாக எதிர்பார்க்கப்படும். (சி-51985)

## கணனி விரிவுரையாளர் தேவை

லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் நிதியுதவியுடன் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பினரால் (TITA) நடத்தப்படும் சாவகச்சேரியில் டச்சு வீதியில் அமைந்துள்ள கணனி நிலையத்திற்கு MS Office, DTP பயிற்சி நெறிகளை பயிற்றுவிக்கக்கூடிய முழுநேர விரிவுரையாளர் தேவை.

மேற்படி தகைமையுடையவர்கள் அவற்றினை உறுதிசெய்யும் ஆவணத்துடனும் சுயவிவரக் கோவையுடனும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (09.02.2007) 9 மணி தொடக்கம் ஒரு மணிக்கிடையில் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கணனி நிலையத்தில் உள்ள அலுவலகத்திற்கு சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

(இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)

*Note:* நிலையத்திற்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (57783)

மேலதிக விவரங்களுக்கு:
**0776622045 - Manager (TITA)**

| கணனி பயிற்சி நிலையம் | கணனி பயிற்சி நிலையம் |
|---|---|
| 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | 114, டச்சு வீதி, |
| 021 4591982 | சாவகச்சேரி. |

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 15.10.1927
இறப்பு 18.01.2006

கச்சாய் தெற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு, கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட

### திருமதி லட்சுமணபிள்ளை சின்னம்மா

திதி: சங்கடகர சதுர்த்தி 06.02.2007

பாசமுடன் பார்த்திருந்து
பாசமுகம் மறைந்தின்று
ஆண்டொன்று ஆனதம்மா
ஆறவில்லை எம் துயரம்
ஆறுதல் அடையவேண்டுகின்றோம்
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் : சாம்பவி, பிரியங்கா, மாதங்கி, துவாரகன், லக்ஷிகரன்.

(57641)

## மரண அறிவித்தல்



### செல்லையா இராசரத்தினம்

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்லையா இராசரத்தினம் நேற்று (05.02.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான நாகநாதர் - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் பரிமளத்தின்(மங்களம்) அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசகுமார் மற்றும் இராசேஸ்வரி (ஆசிரியை, யாழ். சரவணை சினன்னமடு றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம்), மகேஸ்வரி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் கதிரவேற்பிள்ளை (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் சிவக்கொழுந்து(கனடா), மங்களம், வடிவேலு, தவமணி(பிரான்ஸ்), நீலாம்பாள், தங்கரெத்தினம், தங்கமணி, செல்வராசா மற்றும் காலஞ்சென்ற யோகம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் விசுவலிங்கம், அன்னலெட்சுமி, சோமசுந்தரம், சுந்தரம், காலஞ்சென்ற இலட்சுமணன் மற்றும் சுப்பையா, வையந்திமாலா காலஞ்சென்ற சிவக்கொழுந்து ஆகியோரின் மைத்துனரும் சுரேக்கா, சாம்பவி, கார்த்திகேயன், கஸ்தூரி, இராகுலன், ரெனேக்கா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06.02.2007) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சல்லிபரவைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (57778)

தகவல்:
செ.வடிவேலு (அண்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

## யாருடன் யார் பேசுவது?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான கலந்துரையாடல்களில் அரசுடன் இணைந்து செயற்பட முன்வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நேற்று முன்தினம் இலங்கையின் சுதந்திர தினத்தை ஒட்டித் தாம் ஆற்றிய முக்கிய உரையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்திருக்கின்றார்.

இந்த அழைப்பு வெளிப்பட்ட திடீர் வேகத்திலேயே, அதற்கான பதிலும், பதிலடியாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து வந்துவிட்டது.

'அரச பயங்கரவாதத்தினால் தமிழ் மக்களை அச்சுறுத்திக்கொண்டு, இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தமிழ்க்கூட்டமைப்பைத் தம்மோடு சேர்ந்து ஒத்துழைக்குமாறு ஜனாதிபதி தமது சுதந்திரதின உரையில் அழைப்புவிடுத்திருக்கின்றமையானது சர்வதேச சமூகத்தை ஏமாற்றுகின்ற ஒரு தந்திரோபாய நாடகமே ஒழிய வேறொன்றுமில்லை." - என்று சீற்றத்துடன், ஜனாதிபதியின் அழைப்புக்குப் பதிலடி கொடுத்திருக்கிறார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்.

அவர் சுட்டிக்காட்டியுள்ள ஒரு முக்கிய விடயம் இங்கு ஊன்றிக் கவனிக்கப்படவேண்டியது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு காணப்பட வேண்டுமானால் பிணக்குக்குரிய தரப்புகளின் பிரதிநிதிகள்தாம் பேசவேண்டும்.

அந்த வகையில் பிரச்சினைக்குரிய பிரதான தரப்புகள் இரண்டு. ஒன்று சிங்களத் தரப்பு. மற்றையது தமிழர் தரப்பு. மூன்றாம் தரப்பினராகிய முஸ்லிம்களும் தீர்வு முயற்சிகளின் பிரதான கட்டத்துக்குள் சேர்த்துக்கொள்ளப்படவேண்டியவர்கள்.

இந்தத் தரப்புகளின் பிரதிநிதிகள் யாரோ அவர்கள்தாம் கலந்துரையாடி, பேசி, இணக்கத்துக்கும், உடன்பாட்டுக்கும், தீர்வுக்கும் வரவேண்டும்.

அப்படிவரும் தீர்வுதான் நீதியானதாக - நியாயமானதாக - நின்று, நிலைத்து, நீடிக்கக் கூடியதானதாக - சகல தரப்புகளினால் ஏற்கப்படக் கூடியதானதாக - உருவாக முடியும்.

தரப்புகளின் உண்மையான பிரதிநிதிகளுடன் அல்லாமல், ஆட்சியாளர்களுக்குப் பிடித்த மானவர்களுடனும், அவர்களுக்கு உடன்பாடானவர்களுடனும் பேசிக் காணப்படும் தீர்வு ஏற்புடையதாகாது; நீதி, நியாயமானதாகாது; நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய தகுதியுடையதாக அது அமையாது.

தரப்புகளின் பிரதிநிதிகள் யார் என்பதுதான் இங்கு முக்கிய - பிரதான - கேள்வி.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள தேசம் தனது தலைமையைத் தேர்ந்தெடுக்கட்டும் என்று விட்டுக்கொடுத்து, ஒதுங்கி, தேர்தலைப் பகிஷ்கரித்து நின்றது தமிழர் தாயகம். அதனடிப்படையில் சிங்கள தேசத்தின் தலைவராக வெளிப்பட்டார் - வெளிப்படுத்தப்பட்டார் - மஹிந்த ராஜபக்ஷ.

மறுபுறத்தில், தமிழர் தாயகம், தனது ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகள் யார் என்பதை கடந்த பொதுத் தேர்தலில் தெளிவாகவும், திட்டவட்டமாகவும், உறுதியாகவும், ஏகமனதாகவும் வெளிப்படுத்தி நின்றது.

புலிகளே தமிழர்களின் பிரதிநிதிகள், அவர்களுடனேயே இனப்பிரச்சினைத் தீர்வு குறித்துப் பேசப்படவேண்டும் என்ற கோரிக்கையை மட்டுமே முன்வைத்துக் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர். தமிழர் தாயகத்தில் 90 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு அளித்து, அவர்கள் முன்வைத்த அந்த ஆணையை உறுதிப்படுத்தினார்கள் தமிழர்கள்.

ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்ததன்மூலம், விடுதலைப் புலிகளே தமிழர் தாயகத்தின் பிரதிநிதிகள் என்பதை தமிழ் மக்கள் அடையாளம் காட்டியுள்ளனர். அதனை இப்பத்தியிலேயே ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஆகவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைதித் தீர்வுக்கான பேச்சுகளைப் புலிகளுடன் தான் மேற்கொள்ள வேண்டும், தங்களுடன் அல்ல என்பதையே சிவாஜிலிங்கம் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

தமிழ் மக்களின் பிணக்கிற்கான தீர்வு தமிழ் மக்களுக்கு ஏற்புடையவர்களோடுதான் பேசிக் காணப்பட வேண்டுமே ஒழிய, சிங்களத் தலைமையின் விருப்புக்குரியவர்களோடு அல்ல.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காகத் தென்னிலங்கையில் உடன்பாடு ஒன்றை எட்ட வைக்கும் நடவடிக்கை என்ற கோதாவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு ஒன்று அமைக்கப்பட்டது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது அதில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சி களோ இந்தக்குழுவின் அமர்வுகளுக்கு அழைக் கப்படவேயில்லை.

இதன் காரணம் என்ன?

தென்னிலங்கையில் இனப்பிரச்சினைக் குத் தீர்வாக எட்டப்படும் உடன்பாடு குறித்து, மறுபக்கத்தில் தமிழர் தரப்புடன் பேசப்படவேண்டும். அங்குதான் - அப்போதுதான் - இணக்கத்தீர்வு எட்டப்பட முடியும் என்பதாலேயே மறுபக்கத்தில் தமிழர் தரப்பில் இருக்கக்கூடிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தென்பகுதியில் உடன்பாட்டைக் காணும் தரப்பின்கூட்டங்களுக்கு அழைக்கப்படவில்லை.

தென்பகுதியில் பொது உடன்பாட்டை ஏற்படுத்தும் கட்சிகளுள் - அணிகளுள் - ஒன்றாகத்தான் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. கட்சி, ஜனாதிபதியால் அடையாளம் காணப்பட்டு, தென்பகுதியின் உடன்பாட்டை எட்டுவதற்கான கூட்டங்களுக்கு அது ஒழுங்காக அழைக்கப்பட்டிருக்கின்றது என்பதே.

எனவே, அமைச்சர் டக்ளஸுடனும், ஆனந்தசங்கரி போன்றோருடனும் பேசி, தென்னிலங்கை இணக்கத்தை ஜனாதிபதி வலுப்படுத்திக் கொள்ளட்டும்.

மறுதரப்பில், தமிழர் தாயகத்தோடு இணக்கம் காணவேண்டும் என்ற உண்மையான விருப்பும், ஆர்வமும், வேணவாவும் அவருக்கு இருக்குமானால் அது தொடர்பாகத் தமிழர்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகளான புலிகளை அழைத்தே அவர்களோடு அவர் பேசவேண்டும். அதற்கு சங்கரி, டக்ளஸ் போன்றோர் பொருத்தமானவர்கள் அல்லர்.

புலிகளைப் பேச்சுக்கு அழைப்பதற்கான - அவர்கள் பேச்சுக்கு வர சம்மதிக்கக் கூடிய - சூழலை ஏற்படுத்துவதும் ஜனாதிபதி மஹிந்தரின் கைகளில்தான் தங்கியுள்ளது.

# காவிரியிலிருந்து தமிழகத்துக்கு நேரடியாக 192 டி.எம்.சி. தண்ணீர்

## நதிநீர் வழக்கில் இறுதித் தீர்ப்பு

சென்னை, பெப்.6

காவிரி நதி நீர் பகிர்வு தகராறு வழக்கை விசாரித்து வந்த காவிரி நடுவர் மன்றம், தமிழ் நாட்டிற்கு ஒரு நீராண்டில் 192 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என்று இறுதித் தீர்ப்பு அளித்துள்ளது.

காவிரி நதி நீர் தகராறு வழக்கை 1990ஆம் ஆண்டு முதல் விசாரித்து வந்த நடுவர் மன்றம், 1991ஆம் ஆண்டு ஜூன் மாதம் தனது இடைக்காலத் தீர்ப்பில் தமிழ்நாட்டிற்கு 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும் என்று கூறியிருந்தது.

தற்பொழுது அளிக்கப்பட்டுள்ள இறுதித் தீர்ப்பில் 192 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட்டால் போதும் என்று கூறியுள்ள காவிரி நடுவர் மன்றம், இதில் 7 டி.எம்.சி. தண்ணீரை புதுச்சேரிக்கு தமிழ்நாடு அளிக்கவேண்டும். அதாவது ஒட்டுமொத்தமாக காவிரி நதி தீரத்தில் கிடைக்கும் 740 டி.எம்.சி. தண்ணீரில் தமிழ்நாட்டிற்கு 419 டி.எம்.சி.யை பகிர்வு செய்து தீர்ப்பளித்துள்ளது.

எனினும் 419 டி.எம்.சி. தண்ணீரில் கர்நாடகத்தில் இருந்து தமிழ்நாடு பெறப்போவது 192 டி.எம்.சி. தான். மீதமுள்ள 227 டி.எம்.சி. தண்ணீரை காவிரியின் கிளை நதிகளான பவானி, அமராவதி ஆகியவற்றில் இருந்து தமிழ்நாடு பெறவேண்டும் என நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு கூறுகிறது.

கர்நாடகத்திற்கு 270 டி.எம்.சியும் கேரளத்திற்கு 30 டி.எம்.சி.யும் புதுச்சேரிக்கு 7 டி.எம்.சி.யும் பகிர்ந்தளித்து தீர்ப்பு கூறியுள்ள நடுவர் மன்றம் 10 டி.எம்.சி. தண்ணீரை சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்காகவும், பயனற்று கடலில் சென்று கலக்கும் நீராக 4 டி.எம்.சி.யை மதிப்பீடு செய்துள்ளது.

காவிரியில் போதுமான அளவிற்கு தண்ணீர் வராத வறட்சி ஆண்டுகளில் தங்களுக்கு உரிய தண்ணீர் பங்கை 4 மாநிலங்களும் இந்த விகிதாசாரத்தின்படி பிரித்து கொள்ள வேண்டும் என்றும் இறுதித் தீர்ப்பில் நடுவர் மன்றம் கூறியுள்ளது.

இந்த இறுதித் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்ய 30நாள் கால அவகாசம் அளிக்கப்படுவதாக நடுவர் மன்றத்தலைவர் நீதிபதி என்.பி. சிங் கூறியுள்ளார். (அ)

# பல்கலைக்கழக சுற்றாடலில் நேற்றுப் படையினர் சோதனை

யாழ்ப்பாணம், பெப்.6

யாழ். பல்கலைக்கழகச் சுற்றாடலில் நேற்றுப் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் சோதனைகளில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுக் காலையிலேயே பல வாகனங்களில் வந்து சேர்ந்த படையினர் இராமநாதன் வீதி, குமாரசாமி வீதி, பிறவுண் வீதி ஆகியவற்றால் சென்ற வாகனங்களை கடும் சோதனைக்கு உட்படுத்தினர். பாதசாரிகளும் சோதனை செய்யப்பட்டனர்.

பிறவுண் வீதி - கலட்டிச் சந்தியில் 25 இற்கும் மேற்பட்ட இளவயதினர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்று தெரியவந்தது.

சுதந்திர தினத்தை முன்னிட்டும் பல்கலைக்கழக வளாகத்தில் ஏற்றப்பட்டிருந்த தேசியக் கொடி அகற்றப்பட்ட சம்பவத்தை அடுத்தே, வளாகத்தின் சுற்றாடலில் இராணுவத்தினர் நேற்றுத் தீவிர சோதனைகளில் ஈடுபட்டனர் என்று கூறப்பட்டது. (அ-வ-68)

## வலி.தெற்கில் குடும்ப அட்டை மீளாய்வு

யாழ்ப்பாணம்.பெப்.6

உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் தற்காலிகமாக வசிப்போருக்கும் வேறு பிரிவுகளில் இருந்து இடம்பெயர்ந்து வசித்து வருவோருக்குமான குடும்ப அட்டை மீளாய்வுப் பணி எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் 17ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

கிராமசேவையாளர் அலுவலகங்களில் இடம்பெறும் இந்த மீளாய்வுச் செயற்பாட்டில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு வலி. தெற்கு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (1)

# மக்கள் போக்குவரத்துக்கு ஏ-15 பாதையை திறக்க ஏற்பாடு

## கிழக்குத் தளபதி தகவல்

கொழும்பு, பெப்.6

திருகோணமலை மாவட்டத்தையும் மட்டக்களப்பு மாவட்டத்தையும் இணைக்கும் ஏ-15 பாதையை மக்கள் போக்குவரத்துக்கு திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் கிழக்குப் படையணிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டிய இதனைத் தெரிவித்தார்.

பாதையைத் திறப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறு சம்பந்தப்பட்ட திணைக்களத்தைத் தாம் கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரதான வீதியையொட்டிய பல பிரதேசங்கள் விடுதலைப் புலிகளின்கட்டுபாட்டில் இருந்தன.

அண்மைக்காலம் படை நடவடிக்கையின்போது, மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை, பனிச்சங்கேணி, கதிரவெளி, வெருகல் போன்ற பிரதேசங்களை இராணுவம் கைவசமாக்கியது. இதனையடுத்து ஏ-15 பாதையைத் திறக்க அரசு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'ஜாதிக சவிய' திட்டத்தின் மூலம் ஏ-15 வீதி இருவார காலத்தில் புனரமைப்புச் செய்யபடவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-12)

# புதிய அரசியல் மாற்றங்கள் குறித்து மக்களுக்கு விளக்க ஜே.வி.பி. திட்டம்

## 20 லட்சம் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க ஏற்பாடு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அரசியல் மாற்றம் குறித்து தெளிவுபடுத்துவதற்கும், அதுதொடர்பான ஜே.வி.பியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் நோக்கிலும் 20 லட்சம் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் நடவடிக்கை ஒன்றை ஜே.வி.பி. ஆரம்பித்துள்ளது.

அரசுக்கு எதிராக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கடந்த முதலாம் திகதி நடைபெற்ற ஜே.வி.பியின் அரசியல் பீடக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அரசின் ஊழல்களை மறைக்கவும் தேசிய இனப்பிரச்சனைக்கு சமஷ்டித் தீர்வை ஏற்படுத்துவதற்குமே அரசு புதிய கூட்டணியொன்றை உருவாக்கியிருப்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கூறினார்.

திறந்த பொருளாதாரக் கொள்கையை அரசு கொண்டு வரத்திட்டமிட்டிருப்பதாலும் மக்களை விழிப்படையச் செய்யவேண்டியது அவசியம் என அவர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக ஜே.வி.பி. மாவட்ட ரீதியாகவும், தேர்தல் தொகுதி ரீதியாகவும் விழிப்புணர்வுத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது. தற்போதைய அரசியல் மாற்றங்கள் குறித்து ஜே.வி.பி. மீது குற்றம் சுமத்தி பயனில்லை. ஐக்கிய தேசியக்கட்சியுடன் அரசு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் எம்முடன் பேச்சுகளை நடத்தியிருந்தது. எந்த வித பலனையும் எதிர்பார்க்காமல் நாம் அதற்கு அனுமதி வழங்கியிருந்தோம் என்றார் விஜித ஹேரத்.

புதிய அரசியற் செயற்பாடு தோற்கடிக்கப்படாவிட்டால் அது மோசமான விளைவினை ஏற்படுத்திவிடும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்.

ஜே.வி.பி. அரசுடன் இணைந்து செயற்பட மறுப்புத் தெரிவித்ததாலேயே அரசு ஐக்கிய தேசியக் கட்சியின் அதிருப்தியாளர்களை இணைத்துக் கொண்டதாக அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேனவும் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**நாளை**

தை - 24
புதன்கிழமை
07.02.2007
திதி: பஞ்சமி
முன்னிரவு : 08.10
நட்சத்திரம் : அத்தம்
மாலை: 5.54
சுபநேரம் : [illegible]
ராகுகாலம் : [illegible]

# மன்னாரில் இரு தாக்குதல்கள்; சிப்பாய் பலி, மற்றொருவர் காயம்

கொழும்பு, பெப்.6

மன்னாரில் நேற்று இடம்பெற்ற இருவேறு தாக்குதல் சம்பவங்களில் சிப்பாய் ஒருவர் மரணமானார், மற்றொருவர் காயமடைந்தார்.

மன்னார், உயிலங்குளம் இராணுவமுகாம் மீது நேற்று முன்தினம் அதிகாலை 3.45 மணியளவில் ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

மன்னாரில் பேசாலைப்பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3.45 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

அதேவேளை-

வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் உள்ள காவலரண் மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பொலீஸார் ஒருவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1-வ)

குடாநாட்டின் குட்டிச் செய்திகள் - யாழ்ப்பாணம்

## மூவரைக்காணவில்லை ஆணைக்குழுவில் முறைப்பாடு

காணாமற் போனவர்கள் மூவர் தொடர்பான முறைப்பாடு நேற்று யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கலாசாலை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகரான இரங்கநாதன் - ரஞ்சன் (வயது - 29) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணாமற் போயுள்ளார்.

நெல்லியடியைச் சேர்ந்த மார்க்கண்டு விஜயசுரேஷ் (வயது - 34) என்ற வர்த்தகர் ஜனவரி 10ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளார் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை - புதிய சிவன் வீதி, நல்லூரைச் சேர்ந்த யோகராசா மதன்ராஜ் (வயது - 26) என்பவர் கடந்த 31ஆம் திகதி கொழும்பில் காணாமற் போயுள்ளார் எனவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (1-4)

## தென்மராட்சியில் கலாசார மண்டபம் திறப்பு

சாவகச்சேரி சிவன் கோவிலுக்கு அருகில் 11மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டபம் கடந்த வியாழக்கிழமை யாழ். அரச அதிபர் கே.கணேசால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், சாவகச்சேரி நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் ஆகியோர் மற்றும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.

## புத்தகம் கட்டுநர் பரீட்சை பிற்போடுமாறு அரச அதிபர் கோரிக்கை

பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் புத்தகம் கட்டுநர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு கொழும்பில் நடத்துவதற்கு முடிவாகியுள்ள நேர்முகப் பரீட்சையை ஒத்திவைக்குமாறு பதிவாளர் நாயகத்திடம் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கோரியுள்ளார்.

தற்போதைய போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக விண்ணப்பதாரிகள் கொழும்புக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நேர்முகப் பரீட்சையை பிற்போடுமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார். (1)

## சுகாதாரத் திணைக்களத்தின் கண்காணிப்புக் குழு கூட்டம்

யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாவட்ட கண்காணிப்புக்குழுக்கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இதில் சம்பந்தப்பட்ட சகலரையும் தவறாது சமூகமளிக்குமாறு யாழ். பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)

## வடமராட்சியில் மீன்பிடிப் படகு மீது நேற்றுத் தாக்குதல்

வடமராட்சி கிழக்கில் நேற்றுக் காலை மீன்பிடிப்படகு ஒன்று தாக்குதலுக்கு இலக்காகிக் கடலில் மூழ்கியதாகத் தெரிவிக்கப் படுகிறது.


நேற்று முன்தினம் மாலை உடுத்துறையில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற இந்தப் படகு நேற்றுக் கரைக்குத் திரும்பிக்கொண்டிருந்தது என்றும்-

அப்போது கடற்படையினர் அப்படகு மீது தாக்குதல் நடத்தியதில் அது தீப்பற்றி எரிந்து கடலில் மூழ்கியது என்றும்-

அப்படகில் இருந்த கந்தசாமி யோகராஜா ஆகிய இரு மீனவர்கள் கடலில் பாய்ந்து நீந்திக் கரை சேர்ந்தனர் என்றும்- மேலும் கூறப்பட்டது. (அ-1-வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






'தேசத்தின் குரல்' அன்டன் பாலசிங்கத்தின் 50 ஆவது நாள் நினைவு தின நிகழ்வு அமெரிக்காவின் நியூஜேசி மாநிலத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொண்ட இந்தநிகழ்வில் முக்கிய விருந்தினராக கலந்துகொண்ட விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமார் உரையாற்றுவதை இங்கு காணலாம்.

# களுதாவளையில் சூட்டுக்கு இருவர் பலி!

மட்டக்களப்பு, பெப்.6

மட்டக்களப்பு, களுதாவளையில் இனந் தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருவர் உயிரிழந்துள்ளனர். நேற்று மாலை இடம் பெற்ற இச்சூட்டுச் சம்பவத்தில் வீதியில் பயணம் செய்துகொண்டிருந்த ஒருவரும் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர்கள் 40 வயது மதிக்கத்தக்கவர்கள் என்றும் இரவு வரை சடலங்கள் அடையாளம் காணப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-9)

# அன்ரன் பாலசிங்கத்தின் பொறுப்பை ஏற்கமாட்டாராம் அடேல்

லண்டன், பெப்.6

விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளராகத் தாம் செயற்பட மாட்டார் என்று திருமதி அடேல் பாலசிங்கம் தெரிவித்தாக லண்டனில் இருந்து வெளிவரும் 'த டெய்லி டெலிக்கிராப்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

மறைந்த அன்ரன் பாலசிங்கம் வகித்து வந்த விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்கான பொறுப்பாளர் பதவியை அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் ஏற்றுச் செயற்படுவார் எனச் செய்திகள் சில வாரங்களாக வெளிவந்து கொண்டிருந்தன.

''தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் எனது கணவர் வகித்து வந்த பதவியை நான் ஏற்கவுள்ளதாக வெளிவரும் செய்திகளில் எந்தவிதமான உண்மையும் இல்லை'' என்று திருமதி அடேல் ''ஒஸ்ரேலியன்'' பத்திரிகைக்கு மின்னஞ்சல் மூலம் தெரிவித்திருக்கின்றார்.

விடுதலைப்புலிகளின் புதிய சர்வதேச ''குரலாக'' திருமதி அடேல் விளங்குவார் என்று செய்திகள் வெளிவரத் தொடங்கிய பின்னர் அது குறித்து அவர் தமது கருத்தை வெளியிட்டிருப்பது இதுவே முதன் முறையாகும் - என்றும் 'த டெய்லி டெலிகிராப்' குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில் -

திருமதி அடேல், தமது கணவர் அன்ரன் பாலசிங்கம் வகித்த பதவியை ஏற்றுப் பணியாற்றுவார் என்று செய்திகள் வெளிவரத் தொடங்கியதும் அவரைக் கைது செய்யுமாறு ஸ்ரீ லங்காவின் ராஜதந்திரிகள் பிரிட்டிஷ் அரசிடம் கோரிக்கை விடுத்தனர்.

எனினும்-

57 வயதான திருமதி அடேல் பாலசிங்கம் விடுதலைப்புலிகளின் நீண்டகால தீவிர ஆதரவாளர் என்பதாலும் தலைவர் பிரபாகரனின் நம்பிக்கைக்கு உரியவர் என்ற வகையிலும் கணவருடன் சேர்ந்து சர்வதேச மட்டத்தில் பணியாற்றுவதில் மிகுந்த அனுபவம் உள்ளவர் என்ற வகையிலும் விடுதலைப்புலிகள் அமைப்பில் அவருக்குக் குறிப்பிடத்தக்க இடமொன்று உண்டு என்று புலிகளுக்கு நெருங்கிய வட்டாரங்கள் கருதுவதாகவும்-'தடெய்லி கிராப்' தெரிவித்துள்ளது. (அ-1)

## ஆசன நெருக்கடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், தற்காலிக ஏற்பாடாக ஆளும் தரப்பின் முதல் மூன்று வரிசைகளும் அமைச்சர்களுக்கும், அதனை அடுத்து அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கும், பிரதியமைச்சர்களுக்கும் வரிசைப்படி ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அமைச்சர்கள் அல்லாத ஜாதிக ஹெல உறுமயவினர், இ.தொ.காவைச் சேர்ந்த வி.புத்திரசிகாமணி ஆகியோர் தொடர்ந்தும் எதிர்க்கட்சியினரின் பக்கமுள்ள ஆசனங்களிலேயே அமரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பனவற்றுக்கு எதிர்க்கட்சிகளின் பக்கம் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளனஎனவும் தெரிய வந்துள்ளது.

புதிய அமைச்சரவை மாற்றத்தின் பின் இன்று முதலாவதாக இடம்பெறும் நாடாளுமன்ற அமர்வில் பல சுவாரசியமானதும் காரசாரமானதுமான சம்பவங்களும் இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.(ஐ)

## நாளை திருமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. அரச அதிபர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பின் பிரகாரம் -

★ கிழக்குப்பல்கலைக்கழக விபுலானந்தர் நுண்கலை நிறுவன அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 241 பேரும் -

★ இலங்கை ஆசிரியர் சேவையில் மூன்றாம் தர நேர்முகப் பரீட்சையில் சமுகமளிக்கும் 102பேரும் -

★தேசிய கல்வியில் கல்லூரி விரிவுரையாளர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள 29 பேரும் -

★வெளிமாவட்டங்களைச் சேர்ந்த அரச ஊழியர் 109 பேரும் - மட்டுமே கப்பலில் செல்ல அனுமதிக்கப்படுவர்.

மேற்குறிப்பிட்ட தரப்பினர் தவிர்ந்த வேறு எந்தவொரு பயணிக்கும் நாளை புறப்படவிருக்கும் கப்பலில் போக்குவரத்து வசதி செய்யப்படமாட்டாது என்றும் அரச அதிபர் அறிவித்திருக்கின்றார். (அ-1)

## தீவிர எதிர்பார்ப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருகட்சிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கிழித்தெறிவதாகத் தெரிவித்தார்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்க நாடுதிரும்பிய போது, கட்சியின் உறுப்பினர்கள் தமது கருத்தை வெளியிட்டுள்ளனர். கட்சியின் தலைவர் என்ற வகையில் கட்சிப்பிரமுகர்களுடன் கலந்துரையாடிய பின் தனது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிப்பதாகக் கூறியிருந்தார்.

இதன் அடிப்படையிலேயே ரணில் விக்கிரமசிங்கவின் இன்றைய நாடாளுமன்ற உரை அமைந்திருக்கும் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.
(ஐ-1)

## புதிய அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகல நடவடிக்கைகளுக்கும் அரசுக்கு ஆதரவு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. இந்த நோக்கத்துக்காகவே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தமோ அல்லது ஐ.தே.கட்சியோ இப்போது தேவையில்லையென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருதுகிறார். இதனால்தான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அவர் மீறியுள்ளார். புரிந்து ணர்வு ஒப்பந்தம் மீறப்பட்ட பின்னர் அதை நடைமுறைப்படுத்த முடியாது. அதை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் ஜனாதிபதி மீறப்பட்ட அனைத்தையும் மீண்டும் சரிசெய்யவேண்டும். அது அரசினதும் ஜனாதிபதியினதும் பொறுப்பாகும்.

மஹிந்த சிந்தனையை ஏற்றுக்கொண்டு அந்தச் சிந்தனைக்கமைய அனைத்தும் நடைபெற வேண்டுமென அரசு நினைத்தால் அது முழு நாட்டையும் நாசமாக்கும் செயலாகும்.

அரசின் ஆட்சியில் மக்கள் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் இன்னல்களை அனுபவிப்பதுடன் அரசில் ஊழல்கள், மனித உரிமை மீறல்கள், வாக்குகள் நிறைவேற்றப்படாமைஆகியவற்றை எதிர்த்து ஐ.தே. கட்சி நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் அரசுக்கெதிராக கடும் நடவடிக்கை களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது - என்று அவர் தெரிவித்தார். (அ-ஐ)

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் இராசமணி (மணியம்மா)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் இராசமணி நேற்று (05.02.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பு - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தங்கமணியின் சகோதரியும் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் ஈஸ்வரி (உடுவில்), பன்னீர்செல்வம் (சுவிஸ்), உதயச்செல்வம் (ஜேர்மனி) ஆகியோரின் தாயும் குணசேகரத்தின் அன்பு மாமியும் சுதாகரன் தர்மினி,அஞ்சுகா ஆகியோரின் பேர்த்தியும் கிஷானிகாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2007) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 11 மணியளவில் பூவோடை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகம்மாள் கோயில் வீதி,
உடுவில், சுன்னாகம். (57788)

தகவல்:
நாகலிங்கம் (கணவர்)
குடும்பத்தினர்.

## திருமதி புனிதவதி சண்முகலிங்கம்

பன்னாலை, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் நுவரேலியாவில் வசித்தவருமான திருமதி புனிதவதி சண்முகலிங்கம் 03.2.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர்-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சொக்கலிங்கம்-காமாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சண்முகலிங்கத்தின் (சட்டத்தரணி, J.P.U.M.) அன்பு மனைவியும் சஜீவன், சஜீலன், அனோஜன் ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான ஈஸ்வரி அம்மா, திருஞானம், கனகசபாபதி, தெய்வநாயகி மற்றும் சிவபூரணம்,செல்வரத்தினம், மகேஸ்வரி, கலியுகவரதன் ஆகியோரின்அன்புச் சகோதரியும் தர்மலிங்கம், நகுலேஸ்வரி விஜயரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 06.02.2007 காலை 8 மணி தொடக்கம் 3 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இறுதிஅஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பி.ப 3.30 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12, றோகினி வீதி,
வெள்ளவத்தை.
தொ.பே: 2553141 (57791)

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

CHEMISTRY CENTRE
Temple Rd (Greenpark)
INORGANIC
Wed, Fri 04.30 - 5.30
Paper Class
Sat, Sun 04.30 - 5.30
By: அன்பழகன் B.Sc

NEW SCIENCE CENTRE
CHEMISTRY Paper Class
Sat, Sun 10 - 11 பிரிவு II
INORGANIC
Sat, Sun 12.30 - 2.00
By: அன்பழகன் B.Sc
இரசாயனவியல் கருத்தரங்கு
இன்றும், வியாழனும் (9.2.07) நடைபெறும்.

புலமைப் பரீட்சை வினாத்தாள்
கொழும்பு பிரபல ஆசிரியர் S.உதயச்சந்திரனின் தரம் 5 புலமைப் பரீட்சை - 2000க்குரிய ஜனவரிமாத வினாத்தாள் பெறலாம்.
தபால் மூலமும் அனுப்பிவைக்கப்படும்.
லக்சுமி கல்வி நிறுவனம்
பரணி பொத்தக சாலை
நாவலர் வீதி - யாழ். தொ.பே: 0776510149

தரம்:5- புலமைப்பரிசில்
திரு.கணேசலிங்கம் அவர்களின்..
வெற்றித்தேர்வு-2
இன்று வெளிவருகிறது.........
வருகின்ற பிரதிகள் குறைவானவை என்பதால் இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.
பூபாலசிங்கம் புத்தகசாலை.யாழ் நகர்.
மொடேன் புத்தகசாலை.நெல்லியடி.
துர்க்கா புத்தகசாலை.சுன்னாகம்.
தரம்:4 முதல் O/L வரை
2007 முதலாவது பரீட்சை வினாப் பத்திரங்கள் இன்னும் ஓரிரு நாட்களில் புத்தகசாலையில்.

# மரண அறிவித்தல்கள்

## இளையதம்பி சந்திரகுமார்



புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய்மேற்கைப் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சந்திரகுமார் 04.02.2007 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புஸ்பமலரின் அன்புக் கணவரும் திலக்ஷன் (லண்டன்), சாருஷன், விதுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோதிலிங்கத்தின் (மணியம்) சகலனும் இராசமலரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.02.2007) செவ்வாய்க்கிழமை 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய். (57792)

தகவல்:
ச.புஸ்பமலர்.

## திருமதி மகேஸ்வரி குகதாசன்

03.02.2007 சனிக்கிழமை கொழும்பில் இறைவனடி சேர்ந்த திருமதி மகேஸ்வரி குகதாசனின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இன்று (06.02.2007) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் மாலை 4.15 மணியளவில் கல்கிசை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே: 011 2725789
011 2725208
(57790)

தகவல்:
த.குகதாசன் (கணவர்)
(மருதனார் மடம், யாழ்ப்பாணக் கல்லூரி, விவசாய நிறுவன அதிபரும், முன்னாள் விவசாயத் திணைக்களத்தின் ஆராய்ச்சி அலுவலரும்.)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் ... 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org